தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, நவம்பர் 25, 1970.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

திரு. கமல் அப்துல் நாசர், ஜெனரல் டிகால், டாக்டர் சி. வி. ராமன், திரு. யூசுப் பின்இஷாக் ஆகியோரின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தியாவின் சிறந்த நண்பரும் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவருமான திரு. கமல் அப்துல் நாசர் அவர்கள் 29—9—1970-ம் நாளன்று மறைந்து விட்டார் என்ற செய்தியை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய நாசர் அவர்கள், மத்திய கிழக்குப் பகுதியில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டவர்; நம்முடைய இந்தியப் பெருநிலப்பரப்போடு நல்ல நட்புறவு கொண்டு, உலகத்தில் போர் ஒய்ந்து அமைதி நிலவ அரும்பாடு பட்டவர். அவர்களுடைய மறைவுக்கு இந்த மன்றம் வருந்துகிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஃப்ரெஞ்சு நாட்டின் முன்னாள் தலைவர் ஜெனரல் டி கால் அவர்கள் 9—11—1970-ம் நாளன்று மறைந்துவிட்டார் என்ற செய்தியையும் வருத்தத்தோடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உலகத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க புகழ்மிக்க தலைவர்களில் சிறந்தவராக விளங்கியவர் ஜெனரல் டி கால் அவர்கள் ஆவார்கள். குழப்பமாக இருந்த அரசியல் சூழ்நிலையில் அமைதியானதொரு ஆட்சி ஃப்ரெஞ்சு நாட்டில் நடைபெற தம்முடைய அருமுயற்சி காரணமாக அரும்பாடுபட்ட அவர்கள் மறைந்துவிட்டது உலகத்திற்குப் பேரிழப்பாகும் என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கீர்த்திபெற்ற விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் சி. வி. ராமன் அவர்கள் 21—11—1970-ம் நாளன்று மறைந்துவிட்ட செய்தியையும் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தவர்—நோபல் பரிசு பெறத்தக்க மேதையாக இருந்து, விஞ்ஞானத் துறையில் "ராமன் எஃபெக்ட்" என்னும் ஓர் அரிய உண்மையை உலகத்திற்கு எடுத்துக்காட்டி, உலக

விஞ்ஞானிகளால் போற்றப்படக் கூடிய ஒரு பெரும் நிலையைப் பெற்றவர் நம்முடைய மறைந்துவிட்ட டாக்டர் சி. வி. ராமன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில்—அவர்களுடைய புகழ் தமிழ்நாட்டுக்குப் புகழ் என்ற நிலையில்—அவர்களுடைய மறைவு தமிழகத்திற்கு பேரிழப்பாகும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தூரக் கிழக்கு பகுதியில் சிங்கப்பூர் நாட்டுக் குடியரசுத் தலைவராக இருந்த திரு. யூசுப் பின் இஷாக் அவர்கள் 23—11—70-ம் நாளன்று மறைந்துவிட்ட செய்தியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அன்னாருடைய மறைவு, உலக நாடுகளில் அமைதி காண விரும்புகிற மக்களுக்கெல்லாம் வருத்தம் தருகின்ற செய்தியாகும்.

ஆக, இந்த நான்கு பெரியவர்களுடைய மறைவுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

2. இரங்கல் தீர்மானம்.

உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி அவர்களின் மறைவு குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

<u>மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே,

கடலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப் பேரவையின் உறுப்பினர், வழக்கறிஞர், திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் 22—10—1970-ம் நாளன்று திடீரென்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னரது மறைவால் வருந்தும் குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

என்ற இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1967-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இந்தப் பேரவையில் இருந்து அரும்பணியாற்றிய அருமை நண்பர் திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியது எல்லோருக்கும் துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கக் கூடிய ஒரு செய்தியாகும்.

திரு. இளம்வழுதி அவர்கள் இளம் வயதிலேயே எதிர்பாராத இந்த மறைவை அடைந்தது எல்லோருக்கும் கலக்கத்தை அளித்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அந்த அளவுக்கு